DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 82/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 8 |
| Name | குமார் |
| Father / Husband Name | திருஞானசம்பந்தம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் திருச்செந்தூரில் குடியிருந்து வருகின்றேன். நான் திருச்செந்தூர் முருகன் கோவிலில் தேவஸ்தானத்தில் வேலை செய்து வருகின்றேன். கடந்த 31.08.2014 ம் தேதி காளையார்கோவிலில் நடக்கவிருந்த உறவினரின் திருமணத்தில் கலந்து கொள்ள என் மனைவி பருவதம் எனது மைத்துனர் சோமசுந்தரம், எனது அக்கா இராதா, அக்கா மகன் அருணாச்சலம் ஆகியோர் மதுரையில் இருந்து இண்டிகா TN 7860 காரில் வாடகைக்கு எடுத்து காளையார்கோவிலுக்கு சென்றார்கள்.

2) திருமணத்திற்கு சென்று விட்டு மீண்டும் திரும்பி வரும்

போது மானாகுடி விளக்கு ரோட்டில் மதியம் 01.30 மணியைப் போல் என் மனைவி மற்றும் உறவினர்கள் சென்ற வண்டி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி போகும் போது அவர்களுக்கு எதிர் திசையில் கிழக்கு நோக்கி வந்த மேக்சி கேப் என்ற வாகனம் எனது மனைவி உறவினர்கள் வந்த வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக மதியம் 02.30 மணியைப் போல் தகவல் வந்தது.

3) மேற்படி விபத்தில் எனது மனைவி தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். உடன் சென்ற சோமசுந்தரத்திற்கு வலது கால் தொடை, எனது அக்காவிற்கு வலது கால், தலை ஆகியவற்றில் காயம், என் அக்கா மகனுக்கு காயம் ஏற்பட்டு காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்துள்ளதாக தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது என் மனைவியை பார்க்க உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

4) எனது மனைவியின் இறப்பிற்கு வாகனம் மோதியது தான் காரணம். மறுநாள் காலை 09.00 மணியளவில் எனது மனைவியின் பிரேதத்தை விசாரணை முடித்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) எந்த உறவினரின் திருமணத்திற்கு என் மனைவி சென்றார் என்றால் என் மைத்துனர் வீட்டு திருமணம். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் 31.08.2014 ம் தேதி மாலை 06.30 - 07.00 மணியிருக்கும். அப்போது போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்களா என்றால் நான் நேரடியாக காவல் நிலையம் சென்றேன். அவர்கள் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார்கள். நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) இந்த வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் என் மைத்துனர் கொடுத்திருப்பார். அவர் எங்கு வைத்து புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்தை அதன் பிறகு சென்று பார்த்தேனா என்றால் இல்லை. யார் எனக்கு தகவல் சொன்னார்கள்

என்றால் காவல் நிலையத்தில் இருந்து ஒரு சார்பு ஆய்வாளர் எனக்கு மதியம் 02.30 மணியைப்போல் போன் செய்து தகவல் சொன்னார்.

3) எனக்கு தகவல் சொன்ன சார்பு ஆய்வாளரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தை ஏற்படுத்திய எதிர்திசையில் வந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் மங்களசுப்பிரமணியன் என்று போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன். இறந்து போனவர் என் மனைவி என்பதால் நான் இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் என்னிடம் விசாரித்தார்கள்.

4) என்னிடம் போலிசார் என்ன விசாரித்தார்கள் என்றால் இறந்த நபர் யார், என்ன உறவுமுறை, இன்னும் அது குறித்து விசாரித்தார்கள் நான் அப்போது பதற்றத்தில் இருந்தேன். எந்த தேதியில் போலிசார் என்னை விசாரித்தனர் என்றால் அன்றைய தினமே விசாரித்தனர்.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.04.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**